
# மறியல் வீட்டு அம்மானை









முனைக்காடு, ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகியம்மன் ஆலயங்களின்
பிரதமகுரு, சிவஸ்ரீ, ப.மானாகப் போடி ஐயர் அவர்கள்
உவந்தளித்த

# ஆசியுரை

பாடுகின்றோர் எல்லோரும் புலவரல்ல

பாட்டென்றால் பண்டிதற்கே உரிமையல்ல

என்றார் பாரதிதாசன்



இவ்விடயத்தை அடிப்படையாக கொண்டு சில கிராமியப் புலவர்கள் தமிழ்மொழியின் இலக்கணம், வரியமைப்பு, குறியீடுகள், எழுத்து வேறுபாடு என்பன அறியாமல் பொருள் பொதிந்த வியக்க வைக்கும் பாடல்களை பாடியுள்ளார்கள். இவ்வாறான பாடல்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் செல்வாக்கையும் பெற்றுள்ளன.

காவியம், காவடிப்பாட்டு, கும்மி தாலாட்டு, அகவல் என்பன சிறு நூல்களாக இருக்க அம்மானை என்பது பெரிய நூலாகவும் மெட்டு அமைப்பில் வேறுபட்டும், வெண்பா, வசனம், நடை என பகுக்கப்பட்டு ஒரு கதையை உவமானங்களுடனும் இசையுடனும் தரவல்லது.

இவ்வகையான ஒரு பாடலை "வளரும் பிள்ளைகளுக்கான மறியல் வீட்டு அம்மானை" எனும் பெயரில் முதலைக்குடா மேற்கு திரு.மா.கேதாரபிள்ளை அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ளார் இதில் பாவத்தின் பலன் என்ன என்றும் தண்டனை, குற்றம் மறியல் வீட்டின் தன்மை அதற்குள் செல்லாமல் இருக்கும் வகைகள் என்பன பற்றி கூறுகின்றார்.

இவர் பல பாடல்களை பாடியிருப்பினும் நல்ல கருத்தை வலியுறுத்தும் பாடலாக இது அமைகின்றது இவரது பணிக்கு இறைவனது அருளும் ஆசியும் வேண்டுவதோடு இளம் சமுதாயம் நன்மை பெறவும் வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ ப.மானாகப்போடி ஐயர்**
**முனைக்காடு - கிழக்கு.**

மண்முனை தென்மேற்குப் பிரதேச கொக்கட்டிச்சோலை
தவிசாளர் மற்றும் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட

# மதிப்புரை

மக்கள் சேவை மகேசன் சேவை என்பர். மக்களுக்கு செய்கின்ற சேவையில் அறிவு வழங்குவதும் உயிர் காப்பதும் உன்னதமான சேவையாக உள்ளது, அவ்வாறான இரு சேவைகளையும் பாடல்கள் மூலம் இறையுணர்வையும் நன்னெறிகளையும் போதிப்பதுடன் வைத்தியம், மாந்திரீகம் என்பவற்றால் உயிர் காக்கும் தொழிலையும் செய்து வருபவர் முதலைக்குடா மேற்கை சேர்ந்த திரு.மாணிக்கர்.கேதாரபிள்ளை அவர்கள்,

அவர் சேவையின் மதிப்பை உணர்ந்தவர், தன்னிடமிருக்கும் பொக்கிசமான அறிவுத்தேடல்கள் மக்கள் மத்தியில் சென்று பலன் பெற வேண்டும் என்று விரும்புபவர் கல்வியின் உயர் நிலை எட்டாத கவிஞர், பக்குவப்பட்ட பாவலன் குற்றம் புரிந்தால் எவை கிடைக்குமென்று அறிந்து கூறுகின்றார். இவரின் கவித்துவமும், வைத்தியசேவையும் மக்கள் பொருட்டு பலனெய்த வேண்டும் என மதித்து வாழ்த்துகின்றோம்.

**செயலாளர் மற்றும்**
**சகல உத்தியோகத்தர்களும்**

**தவிசாளர்**
**த.பேரின்பராஜா**
**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**
**கொக்கட்டிச்சோலை.**

# முகவுரை



இந்தப் புத்தகத்தில் விரிவாய் எல்லாம் எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள விடயங்களில் முதலாவது வணக்கங்கள், விநாயகர் வணக்கம், அடுத்து மகாவிஸ்ணு வணக்கம், முருகன் வணக்கம், சிவபெருமான் வணக்கம், அடுத்து சரஸ்பதி வணக்கம், அம்மானையின் வரலாறு.

இலங்கையில் எத்தனை சிறைசாலை இருக்கிறது என்றும், படுக்கை, குளிப்பு, சாப்பாடு, அடைக்கும் விதம், திறக்கும் விதம், கட்டிடங்கள், எப்படி அமைக்கப்பட்டு இருக்கிறது. என்றும் மறியல்காரனை எப்படி நடத்துகிறார் என்றும், ரிமாண்ட்காறனை எப்படி நடத்துகிறார் என்றும் தாக்கு தீந்தவரை எப்படி நடத்துகிறார் என்றும் எல்லாம் விரிவாய் எழுதப்பட்டு இருக்கிறது.

தான்தோன்றீஸ்வரன் அருளால் பிறகு ஒரு மேடர் கதை. மணியன் சின்னான் என்று இரண்டு பேர். இலங்கையில் இவர்கள் ஆளையாள் துப்பாக்கியால் சுட்டு இறந்தவர்களுக்கு என்ன நடக்குது என்றும், சுட்டவர்க்கு என்ன நடக்குது என்றும் இறைவன் அருளால் எழுதப்பட்டு இருக்கிறது. வளரும் பிள்ளைகள் படிக்கும் மறியல் வீட்டு அம்மானை

**எழுதியவர்**

ந.மா.கேதாரபிள்ளை

காளிகோயில் வீதி, முதலைக்குடா மேற்கு,


கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

# வணக்கம்

அன்பான அடியார்களே 08.08.1972ல் இந்த புத்தகம் எழுதப்பட்டது. பணம் இல்லாக்காரணம் வெளியிடவில்லை இப்போது கொக்கட்டிச்சோலை பிரதேசசபை செயலாளர் பொறுப்பதிகாரிகளால் கணணி மூலம் தட்டச்சு செய்து வெளியிட உள்ளேன் என்பதை மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

பிரதேசசபைக்கே எனது மனம் உவர்ந்த நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

கணணியில் தட்டச்சு செய்யப்பட்ட மறியல் வீட்டு அம்மானை பாடல்களை மீண்டும் தனது கணணி மூலம் சரி பிழை பாத்த சிவப்பிரபாசம் சபேசன் என்பவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



# எம்மால் வெளிவந்த புத்தகங்கள்

1) நாராயண தோத்திரம்
2) நல்லை கந்தன் தோத்திரம்
3) சிறை மீட்ட கும்மி
4) சிறை மீட்ட பதிகம்
5) காளி காவியம்
6) விநாயகர் தோத்திரம்
7) காளிகும்மி
8) சரஸ்வதி தோத்திரம்
9) தான்தோன்றி சிறைமீட்ட பதிகம்
10) தாந்தாமலை வரலாற்று அம்மானை
11) மாமாங்கப்பிள்ளையார் அகதிகள் தோத்திரம்

(வெளியிட்ட புத்தகங்கள்)

**இயற்றியவர் :- ந.மா.கேதாரபிள்ளை**
**காளி கோயில் வீதி,**
**முதலைக்குடா மேற்கு,**
**கொக்கட்டிச்சோலை,**
**மட்டக்களப்பு.**

# வளரும் பிள்ளைகள் படிக்கும் மறியல் வீட்டு அம்மானை



## விநாயகர் வணக்கம்

முந்திப்பிறந்த முக்கணனார் ஐங்கரனே
ஆனைமுகத்தோனே அடியார் அருள்பவனே
மறியல் வீட்டு அம்மானை மைந்தன் பாட
இலக்கண இலக்கியம் எல்லாம் சரியாக
ஒன்றும் பிழை இல்லாமல் உண்மையுடன்
இவ்வுலகில் எந்தனற்கு அப்பா
வேண்டி அழைக்கிறேன் விரும்பியே
அருகிலிருந்து அருளும் அப்பா உன்வாக்கை.

## மகாவிஸ்ணு வணக்கம்

அரி ஓம் பச்சமாலே அழிவில்லாப் பொருளே
ஐவர் உட கருவியரே விசுவரூபா வாரும்
காட்டி உரைத்ததும் கண்கள் கண்டதும்
ஒன்றும் பிழை இல்லாமல் உலகில் பரவ
கண்டவர்கள் கசிந்துருகிப்பாடவும்
ஏது பிழை இருந்தாலும் என்னக் குற்றம் கூறாமல்
வணங்க தெரியாமகன் அழைக்கிறேன்.
மனமே இரங்கி வாலையாய் நில்லும் அப்பா.

## முருகையன் வணக்கம்

கலியுக வரதா கடவுளே உன் அருளால்
உலகில் பிறந்து உண்மையில் கண்ட
அறயா பாலகர்க்கு ஆண்டவரே கூறுதற்கு
எழுதப் படிக்கத்தெரியா இச்சிறு பாலகனுக்கு
செந்தமிழ் கல்வியை தெரியப்படுத்தும்
ஒளவையார் உன்னருளை பெற்றாப்போல்
கேதாரம் எந்தனற்கு கிட்டவே இருந்து
அம்மானைப்பாட அருளைத்தாரும் அப்பா.

## சிவபெருமான் வணக்கம்

படைத்ததொரு சிவமே பரம்பொருளே
அறியாத பாலகனுக்கு அருளை தருவதற்கு
கொக்கட்டிச்சோலை வந்த குருபரனே
எங்கும் நிறை பொருளே என் சிவமே
கல்லால் செய்தமாடு புல்தின்னற்போல்
காவலாய் இருந்து கதையை நடத்த
அம்மை பரமேசுபரி அருகில்தான் எடுத்து
பாசம்வையும் பாலன் நான் பாடுதற்கு

## சரஸ்வதி வணக்கம்

அரி ஓம் சக்தி அம்மையே வாரும்
எதுவும் தெரியா இச்சிறுவன் அழைக்கிறேன்
உலகமே சக்தி ஓடியே வாரும் அம்மா
வந்துமே உன்விளையாட்டை மக்கள் பாட
என்னை குற்றம் இவ்வுலகோர் கூறாமல்
சொல்கள் தவறாமல் சுந்தரியே தாயே
பரந்துமே என்மேல் பாட அம்மானை
வழியை நடத்தும் மகன் பாடுகிறேன்.

## அம்மானை வரலாறு

சண்டியர்கள் என்றுதானே திரிவோர்க்கு
கூட்டமும் கூடி கொடியவினை செய்து
உள்ளவன் பொருளை ஓடி திருடுவோர்க்கு
கலியுகத்திலே கடவுள் நாங்கள் என்று
அதர்மம் பண்ணி யாருக்கும் அஞ்சாமல்
கெட்டித்தனம் செய்து கெதியா அழிவோர்க்கு
ஆண்டவர்க்கு ஆகாத அரிய குற்றங்களுக்கு
காட்டி இருக்கிறார் கண்களால் பார்க்க
எல்லாம் இவ்வுலகில் இருக்குது அம்மானை
பெண்களை கலியாணம் பிரியமாய் எடுத்து
தம்பியரே கேளும் பிள்ளைகளைக் கண்டாலே
உழைக்க ஏலா என்று ஓடி ஒழிப்போர்க்கு
கக்கூசி வாழி அதை காட்டிடுவார் அம்மானை
பொய் என்று சொன்னால் புழுதது இறந்துவார்

கள்ளர்க்கும் இந்த வேலை காட்டிடுவார் சிறையில்
எல்லோர்க்கும் தண்டனை அங்கே இருக்குது
எண்ணி எழுதவில்லை எங்கும் சிறை வீடு
கண்முன்னே கட்டி கடவுள் அருளால்
பார்த்தவர்கள் கண்டு பயந்து நடப்பதற்கு
உண்டு படுத்து இருக்கிறார் ஊழியர்கள்காண்
எல்லாம் இவ்வுலகில் இருக்குது அம்மானை.

## விருத்தம்

இலங்கையில் உள்ள சிறை எல்லாமேதான்
கூறுகிறேன் நான் குழந்தைகளே கேளும்
பச்சைமால் அருளால் பதினைந்து தானும்
கட்டியே இருக்குது கலியுக மக்கள் அறிய

## நடை

தம்பியரே நானும் சாற்றுகிறேன் இப்போ
வளைத்து மதிலும் வகையான கேற்றுகளும்
போவதும் ஒரு வழி வருவதும் ஒரு வழி
துவக்கு பீரங்கி தோட்டா மிசின்கண்களும்
எப்பொழுதும் காவல் இருக்குது அம்மானை
கடமை செய்யும் கந்தோர் கட்டி இருக்கிறார்
வணங்கும் கோயில் வகையாக தானும் அங்கே
பெண்கள் ஒரு பகுதி ஆண்களுக்கு தானும்
வேறு வேறு இடங்கள் விதமாக தானும்
கட்டடம் கனக்க கண்களால் பார்க்க
பார்க்க பயங்கரம் பாலகர்கள் கேளும்
அயாத்திடப்பள்ளி அங்கே இருக்குது
புத்தருடன் யேசு புகழ் பெரிய விநாயகர்
சிவன் விஸ்ணு முருகன் சிறப்பான ஆலயம்
தனி அறைரும் சரியாகத் தான் இணக்கி
மேல் வீடு கீழ் வீடு. விதமாகதான் இணக்கி
வருத்த வாட்டும் வகையாக தானும் அங்கே
சமைக்கும் குசினி தம்பியரே கேளும்.
கோப்பிறேட்டி கடை கூறுகிறேன் உங்களுக்கு
பாண் வேக்கரியும் பாலகர்காள் உங்களுக்கு

கக்கூசி அணியில் கட்டி இருக்குது.
டோவி லொன்றி தொகுத்து இருக்கிறார்
தச்சன் கம்மாலை தம்பியரே அங்கே
கோல்லர் கம்மாளர் குந்திருந்து அடிப்போர்
நெசவு தொழில் நித்தம் இருக்குது
மரக்கறி தோட்டம் வகுத்து இருக்கிறார்
கமத்தொழில் ஒரு பகுதி காட்டி இருக்கிறார்.
செருப்புச் செய்ய சீராகத்தான் அம்மானை
உலகில் செய்யும் எல்லா தொழிலும்
எல்லாம் இருக்குது இறைவன் அருளால்.
பகுந்து விடுவார்கள் பாலகர்களை வேலை செய்ய
சிறைகளின்பேர் செப்புகிறேன் அம்மானை.

## விருத்தம்

மாளும் சிறை வெலிக்கடை கண்டி தானும்
வகையான பதுளை மாத்தளை கோப்பாய் மகரகம
அளுகடை அம்பாறை மட்டக்களப்பு யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு எக்கெடுவ அனுராதபுரம் பள்ளகலை வத்து
பிட்டியும்

## நடை

படுக்கும் ரூம் அதனை பகருகிறேன் உங்களுக்கு
ஆறு ஏழு அடி அகலநெடுப்பம் உண்டு
பார்க்க பயங்கரம் பாலர்கள் அம்மானை
இரும்பு பூட்டுகள் எங்கும் தானும் உண்டு
மாடு அடைப்பது போல மக்களை தம்பியரே
எண்ணி அடைப்பார் எல்லா வீட்டிலும்

படுக்கையோ அங்கே. பகருகிறேன் காண்
நாலுபேருக்கு ஒருறூமாம் அம்மானை
பாய் சீற்றும் பாலர்கு தான் அங்கே
தும்புதலயாணை சொகுசாய் படுத்துறங்க
உறுண்டு படுக்கவும் ஏலாமல்காண் அங்கே
உறுள ஏலாமல் ஒருபக்கம் தான் படுத்து
தட்டத்து உறுளை தளிப்பு ஆச்சுது காண்

சும்புதலையாணைண் சூடு தணிப்பதற்கு
குளிக்கும் விதம் கூறுகிறேன் உங்களுக்கு
வக்குகளில் தண்ணி மக்களுக்கு அங்கே
எட்டு அவுஞ்சிடின். எடுத்து குளிக்கவே காண்
அள்ளிக்குளிக்க அந்தடின்னும் அம்மானை.

வருசையில் வைத்து, வகையாக தானும்
விசிலும் ஊதி விடுவார்கள் குளிக்க
பத்துடின் குளிக்க. பாலர்காள்ஊதிடுவார்
கேளாமல் குளித்தால் கெட்டிதனம் காட்டிடுவார்
அடியும் இடியும். அங்கே கொடுப்பார்
சிறையில் மூன்று பிரிவு. அங்கே இருக்குது
குற்றப்படாதவரை ரிமாண் என்றிடுவார்
அச்சிகாறன் என்பார். மறியல் காறனுக்கு
தூக்கு தீந்தாலே கொண்டன்காறன் என்பார்
இந்த விதமாய் எங்கு இருக்குது காண்.

தளபாடசாமான் சாற்றிடுவேன் அங்கே
சாப்பிட பீங்கான் தந்திடுவார் உங்களுக்கு
தேத்தண்ணிகுடிக்க சின்னயொக்குமாம்
தண்ணி எடுக்கடின் தப்பாமல் கொடுப்பார்
சலம்போக தம்பிகாள் வாழி அங்கே
தங்கள் உடுப்பு ரிமாண்டில் இருப்போர்க்கு
மறியல்தீந்த மக்களுக்கு தானும்
வெள்ள கழிசன் சேட் விதமாகதானும்
கட்டிகுழிக்க பென்றருமாம் அம்மனை
போருக்க வெற்சீற். புகழகதானும்
கூடிபடுக்கையிலே பிள்ளைகாள்சண்டை
காவல் ஆளிஉடன் கருத்துமே பேசிருல்.

வீடி, சுறுட்டு வேகம் உள்ள கஞ்சாவும்
வெற்றிலைபாக்கு வேண்டி பாவிப்போர்கு
பார்ரடா அவர்கு பகருகிறேன் நானும்
தனிறூம் அவர்கு சடுதியில் கொடுப்பார்
எலும்புமுத்த அடியும். இடுவார்கள் அம்மானை

உப்புகஞ்சும் ஓடர்விளும் அங்கே தான்
மின் ஒளிஇல்லா இருட்டறையும் காண்
மட்டயும் கொடுப்பார் மக்கள் அடிக்கவும்
கணக்கு தும்பு காட்டி முடிய வேணும்மாம்
மூட்டயும் அதற்குள் முழுதும் நிறையவே
பேருமோ அதற்கு பலஞ்சுமேன் அம்மானை
ஆரொடும் கதைக்க ஏலா அந்த இடம் காண்
பூட்டி திறக்கும் விதம் புண்ணியர்கு கூறுகிறேன்
காலை ஆறு மணிக்கு கதவை திறந்தங்கே
குளிக்கவிடுவார்கள் குமாரர்களை அம்மானை
வெல்லும் அடிவிளுகும் விதமாய் நிற்கவேனும்
போளின்பிரியாமல் புதினமதுபாராமலே
ஐந்து நிமிடத்தில் அழகாய் பகிந்திடுவார்
ஆறவுஞ்சிபாண் தேங்காய்சம்பலுமாம்
சீனி ஒரு அவுன்சி, சீராய் கொடுப்பார்
குடிக்கதேத்தண்ணி, குமாரர்கள் அங்கே
சாப்பிட்டு வேலைக்கு சடுதியிலே போக வேணும்
மணி பதின்ஒண்ணரை மதியசாப்பாடுகாண்
சோறு ஒருபேசன் அளந்து கொடுப்பார்
பூட்டிடுவார் பன்னிரெண்டு புண்ணியரை அம்மானை
மணி ஒண்ணரை மக்களைத் திறப்பாராம்
இரண்டுக்கு வெளியே விடுவார்காண்
வேலைக்கு அங்கே விதமாய் போவார்
நாலுமணி அடிப்பார் நாடுவார் சாப்பிட
எட்டு அவுஞ்சிப்பாண் அங்கே கொடுப்பார்
எடுத்து நாடவேணும் இருக்கும் இடம்தேடி
நாலரை பூட்டிடுவார் நானுமோ கூறுகிறேன்
எண்ணி அடைப்பார்கள் எல்லோரையும்
மாடுபோலே அங்கே. அடைப்பார் காண்
இந்த விதமாய் இருக்குது சிறையிலே
ஆக்கும் கறி அருள்கிறேன் உங்களுக்கு

## விருத்தம்

வெண்டிக்காய் கத்தரிக்காய் கறிமிளகாய்
பாவற்காய் பூசணிக்காய் பயத்தங்காய்

அவரக்காய் போஞ்சிக்காய் அழகான கரட் பீற்றூட்
வட்டக்காய் அவரைக்காய் வத்தககாய் மரவள்ளிக்கிழங்கும்

## நடை

இன்னம் உண்டுசிறையில் எல்லாம் கறிதான்
வாழைக்கிழங்கு வகையாய் ஆக்கிடுவார்
பயறும் அவித்து பகுந்து கொடுப்பார்
கடலை அவரை மைசூர் பருப்புகளும்
எண்ணி எழுத ஏலா எல்லா கறிகளும்
பாலோடு பழம் பலகாரவகைகளும்
மீன் முட்டை இறைச்சி விரும்பிய சாமான்
விஸ்கி விறாண்டி விதமான குடிகளும்
புகைக்கு சிக்கிறேட் புகழகதானும்மே
ஒன்றும் குறையாமல் உள்ளது எல்லாமே
சாகும் ஆளுக்கு தயாராய்க் கிடைக்கும்
வாழ்க்கை முடிந்தவர்கு மக்கயே கொடுப்பார்
கேட்டுக்கொடுப்பார் கிட்ட இருந்துமே
சிவனிடம் போவதற்கு சீக்கிரம் கொடுப்பார்
தூக்கு தீந்தவர்க்கு சுறுக்காய்கிட்டிடுங்காண்
மற்றவர் அங்கே வகையாய் இரண்டு கறி
இறச்சி இரண்டு அவுஞ்சிகாண் அம்மானை
தந்திடுவர் சாப்பிட தம்பிகள் உங்களுக்கும்
பெண்களுக்கும் இந்த விதம் ஆண்களுக்கும்
எல்லோர்கும் சாப்பாடு ஒன்றாய்கிட்டுமே
சமைத்து கொடுப்பது ஆண்களே அம்மானை
பெண்களுக்கு இந்த வேலை பிள்ளைகாள் இல்லை
அதற்கு ஒருபாட்டி அங்கே இருக்குது
சிறைக்கைதிகள் செய்தி செப்புகிறேன் அம்மானை
சீவியல் மறியலுக்கு செப்புகிறேன் காண்
வெலிக்கடை சிறையில் விதமாய் நடக்கவேணும்
குற்றங்கள் செய்யாமல் குமாரன் நடந்தாலே
வருசம் மூன்று மாதம் வெளியே கழிப்பார்
அதிலும் நல்லாய் அவர்கள் நடந்தால்
பள்ளக்கலைக்கு பாலலை அனுப்பிடுபார்

திறந்தசிறச்சாலை சொகுசான இடமாம்
சம்பளம் கூட தம்பிகாள் அவர்கு
வருசம் ஆறு மாதம் வலிய கழிப்பார்
வேலை செய்யும் ஆளை மேய்பதற்கு
அவரை கங்காணி ஆக காட்டிடுவார் அம்மானை
மரக்கறிசாமன் மார்க்கட்டில் விற்று வர
நல்ல பதவி நம்பிக்கை உடன் கொடுப்பார்
காலம் கடர்ந்தது கரை ஏறும் நாளையிலே
பணமும் கொடுப்பார் பாலர்க்கு அம்மானை
சின்னமயிந்தர்க்கு செப்புகிறேன் காண்
ஐந்து தொடக்கம் பத்தொன்பது வரை
அவர்க்கு சிறை அங்கே இருக்கு அம்மானை
வந்துவிட்டி மக்களே உங்களைதான்
பாத்து அனுப்பிடுவார் பாலர் கூட்டமாம்
அடியும் இடியும் அங்கே பழக்கிடுவார்
சிறையில் பட்டு திரும்பி ஊர் வந்தாலே
மறுபடியும் போனால் மாட்டுக்கு ஒப்பிடலாம்
நால் ஐந்து குற்றம் நாடியே செய்தால்
பேருமோ ஐயாரிசி பிள்ளைகாள் கேளும்
மாறகம அவர்கு வளமான வீட்டு அம்மானை

குதி நரம்பு வெட்டுவார் குற்றம் கண்டாலே
இரத்தம் கொடுக்கவேணும் எல்லா இடமும்
கெதியாய் அழியலாம் கெட்டித்தனம் செய்தால்
தப்பிப்பிழை செய்து தம்பியரே பட்டாலே
ஆயிரக்கணக்கில் ஆள் இருக்கு அங்கே
சகோதரம் போலே தான் வாழவேணும்
பெரிய வித்துவான்களும் பிள்ளைகள் பட்டு
சிறச்சாலை என்று சிந்திக்கவில்லை காண்
தவச் சாலை என்று தம்பியரே வாழ்ந்தால்
எந்தக்கெடுதியும் இல்லை இவர்களுக்கு
அளவுமீறியகதை அங்கே இல்லை காண்
வணக்கமேசிவன் வந்திட்டார் உலகிலே
எல்லாம் அங்கே இருக்குது காண் அம்மானை
பாத்து நடப்பதற்கு பாலர் தங்களுக்குமே

கொக்கட்டிமரத்தழகன் கோபாலனருளால்
இன்னம் ஒரு செய்தி இயம்புகிறேன் நான்
மேடர் ஒரு செய்தி கூற விரும்புகிறேன்
இலங்கையில் இருபேர் இன்ப வாழ்வை
விட்டுப்பிரிந்த கதை இயம்புகிறேன் அம்மானை
சிவனிடம் சேர்தகதை செப்புகிறேன் அம்மானை
கவனித்துக் கேட்கவேணும் கட்டுக்கதையல்ல
இருபேரும் இறந்தே விட்டார் உலகில்
மணியன் சின்னான் மன்னர் இருபேரும்
சின்னகோபம் சிதறிவிட்டார்கள்
செத்தவன் உடனே சிவலோகமாம்
மற்றவர் படும்கஸ்ரம் மக்களே உங்களுக்கு
கூறுகிறேன் நானும் குமாரர்களை அம்மானை
இறந்த விதங்கள் இயம்புகிறேன் நான்
பொய்யல்ல இது புண்ணியர்க்கு ஆகவே
பாத்து படிக்கபாலர் தங்களுக்கு தான்
கேட்டு வாழும் மன்னர்களும் அம்மானை

# மேடர் கதை வரலாறு

## விருத்தம்

மேடரும் கூறுகிறேன் விரும்பியே கேளும்
பொய்யல்ல இது புண்ணியர்க்கு ஆகவே
கண்டுமே கொள்ள இலங்கையிலேதான்
நடந்ததோர் கதை பாடுகிறேன் தம்பியேரே

## கதையின் வரலாறு

ஊருமோ ஒன்று இலங்கையில் தான் அது
பேருமோ மணியன் சின்னான் என்பார்கள்
இரு பேரும் சொந்தம் இருக்க பலன் இல்லை
இல்லாமல் வந்து இறந்து விட்டார் அம்மானை
மதுவே இருபேரும் வகையாய் அருந்திடுவார்
கூட்டமும் பிரியார் குமாரர் இருபேருமே
தொழிலும் இருபேரும் சொகுசாக தானும்

செய்து பணம் எடுப்பார் தேவை மட்டும் காண்
தச்சன் வேலையடா தம்பியாரே அவர்கள்
நல்ல ஒத்துமை நம்பிக்கை உள்ளவர்கள்
முறையோ சின்னப்பா மகனும் அம்மானை
மதுவாலே சண்டை வருகுது காண்
குடியாலே காலன் குமாரர் மாளப்போறார்
ஒரு நாள் வெறியில் உதாரண கதையினால்
தாக்கப்பட்டு அவர்கள் தத்தழித்து விட்டார்கள்
அன்று துவக்கம் ஆளையாள் கொல்லவே
எண்ணி வாறார்கள் எந்நாளும் அம்மானை
வாய்ச்சண்டை பிடித்து வாறார்கள் அங்கே
தவணையும் எண்ணி தம்பியரே போட்டுவாறார்
இன்றைக்கு நாளைக்கு எண்ணி வாறார்கள்
இரவும் பகலும் இதே நினைவாம் காண்
சின்னான் வயது அறுபதுக்கு ஒப்பிடலாம்
வால வயது மணியனும் அம்மானை
முப்பத்தி ஐந்து முடிந்த பாலன் காண்
சிவன் கணக்கும் சீராய் முடியுதங்கே
தூதர்கள் அங்கே சொல்ல போறார்
துற்குறிகள் அங்கே காட்டுது அம்மானை
குலையாத நாயும் ஊளையிடுகுது காண்
காகமும் வட்டம் காலையில் போடுதாம்
பறந்து பக்கிள் பகட்டிகத்துது காண்
ஒழித்திருந்து ஊமத்தன் மூகுது அம்மானை
வண்டுகள் குளறி வகையாய் திரியுது
குழனியான் அங்கே கூப்பிடுது அம்மானை
இயமனும் அங்கே ஏசவே சொல்கிறார்
கேட்கக் கூடியதாய் கிழம்பியே ஏசுகிறார்
சின்னான் அங்கே திறமாய் ஏசலுற்றான்
அழிவு முடியுது அவனே துடிக்கின்றான்
சாகவே போறான் புண்ணியன் தானும்
மணியன் காதில் வந்து விழுகிது அம்மானை
கோபமும் வருகுது குமாரனுக்கு அங்கே
பொறுக்க ஒண்ணா கோபமும் புண்ணியர்கு தான்
வந்து விழுந்தது மன்னன் மணியனுக்கு

என்னவருகும் என்று எண்ணிப்பாராமலே
வருகும் காலத்தை மணியன் எண்ணாமல்
கொல்லவே நினைத்தான் குமாரன் காண் அம்மானை
தோட்டா துவக்கு சுறுக்காக தான் எடுத்தேன்
பேய் ரூபம் ஆகியே பிள்ளைகாள் வாரனுள்
சின்னான் சத்தம் தேடிவாறான் காண்
ஓடியே வந்தான் ஒரு நொடி நேரத்தில்
சின்னான்தன் வளவில் நின்று துடிக்கிறான்
மணியன் வந்தால் வடிவாய் அங்கே
அடிக்க எண்ணி அவனும் ஏசுகிறான்
காதில் கேட்கும் சனம் கவலைப்படுகிறது
பயன்கள் வருகுது பக்கத்து வீட்டார்கு
அடுத்த வீட்டு சனம் அவதிகாண் அம்மானை

## விருத்தம்

மணியனும் சின்னானும் வீடுவந்து மக்காள்
வளமாய் துவக்குடன் நிற்கயிலே
சின்னான் மக்காள் சீக்கரம் நெருப்புக் கொழுத்தி
வாசலில் கிடந்த குப்பைக்கு வைத்தாராம்

## விருத்தம்

காலமும் இரவு கடும் இருட்டாம்
எங்கும் வெளிச்சம் இன்பமாய் வீசயிலே
தெரியவே வைத்தார் சின்னான் பிள்ளைகள்
மாளவே போறான் மக்களே கேளுங்கள்

## நடை

இரவு எட்டு நேரமாம் காண் அம்மானை
மணியனும் பதுங்கி வளமதுபார்க்க
வெளிச்சம் அங்கே வீசி தெரியுதுபார்
நீட்டினான் துவக்கு நேரக அம்மானை
பட்டது சின்னான் பளுவெல்லம் உடைய
உடைத்து விழுந்தான் உயிர் போகுதுபார்
படைத்த ஆள் இடம் பதறிப்போகும்
ஏசின சின்னான் சத்தமே இல்லை

வெடியும் கேக்க விழுந்ததுதான் தெரியும்
கண்டது மக்கள் கத்துகிறார் அம்மானை
மணியன் சுட்டான் என்று வலுவாய் கத்தயிலே
பாத்தான் மணியன் பயங்கள் வருகுது
துவக்குடன் காட்டில் பூருகிறான் அம்மானை
ஆள் காணா வனம் அவன் ஓடிவிட்டான்
மணியன் துவக்கோடு மறைத்தான் காட்டிலே
காட்டிலே போறான் காண் அம்மானை
கத்துது சனம் காலனோ வென்று
பிரண்டு கத்துகிறாள் பெண்டாட்டிதான்
கூறவே ஏலா குழந்தைகாள் கேளும்
ஊரில் உள்ள சனம் ஓடிவருகிதுபார்
பார்த சனம் பரிதாப்படுகிறார் காண்
சின்னான் இனம் தேடி வாறார்கள்
என்ன கெதி என்று ஏங்கி கத்துகிறார்
பிள்ளைகள் எல்லாம் பிரண்டு கத்துது
என்ன கெதி என்று ஏங்குகிறார் அம்மானை
இப்படி இருக்கும் வேளையிலே பார் காண்
ஊர் சனம் சேர்ந்து ஓடுகிறார் நீதியிடம்
கிராம சேவையாளர் தேடி போறார்கள்
ஓடியே போறார் ஒரு நொடி நேரத்திலே
சின்னான் செய்தி கூற சீக்கிரம் போறார்
மாண்ட செய்தி கூற மக்களே போறார்கள்
கிராம விதானையிடம் கெதியாய் தானே
மாண்ட செய்திகளை வளுத்தினார் அம்மானை
விதானை கேட்டு விரைவாய் வந்தாராம்
மேடர் கிடங்கும் இடம் தேடியேவாரார் பார்
வந்துபார்தார் மக்களே விதானையும்

பார்த்து பயந்து பரிதாபப்பட்டார் காண்
ஆரடா இந்த வேலை ஆள் கூறும் என்றார்
நின்ற சனம் எல்லாம் மணியனே என்றார்
வேறா யாரும் இல்லை மணியனே என்றார்
தப்பாமல் கேட்டார் விதானையும் காண்
விதானை முறைப்பாடு விரைவாய் எழுதினாராம்

கிராம சேவையாளர் கேதியாய் போரார்
தந்தி அடிக்க தம்பிகாள் போறார்
பொலிசுக்கு தந்தி புண்ணியர் அடித்தார்
மேடர் கிடக்குது விரைவாய் வாருங்கள்
அவசர தந்தி அங்கே அடித்தார் அம்மானை
வந்து விழுத்தது தந்தியும் பொலிசிக்கு
துவக்குடன் ஐயாமார் வாரார்கள் அங்கே
வாகனத்திலேறி வந்தார்கள் பதறியே
மேடர் கிடக்குமிடம் விரைந்து வந்தார்
வந்து சேர்ந்தார்கள் மக்களே கேளுங்கள்
ஆரடா செய்த என்று அதட்டலுற்றார்
கிராம சேவையாளர் கெதியாய் உரைத்தார்
மணியன் சேர் வளுத்தினார் அம்மானை
ஐயாமார் அருள்கிறார் வசனம்
காட்சிகள் எல்லாம் தப்பாமலே தான்
பெரியவருடம் பிசகாமல் கூற வேணும்
மாறிச் சொன்னால் மறியல் போடுவார்
பொலிசி கதை கூறி போறாராம் அம்மானை
நீதிபதியிடம் நிமிட நேரத்திலேகாண்
வந்து கூறுகிறார் மேடர் செய்திகளை
நல்லது பாப்போம் நாடி வாறார் நீதிபதி
காறில் ஏறி கடுதியே வாறார்காண்
பொலிசி பின்னால் புளுதி கிளம்பிடவே
சின்னான் கிடக்கும் இடம் வந்தார்கள் அம்மானை
பார்த்துமே மேடரை பரிதாபபட்டாராம்
ஆர் செய்தது என்று அன்பாய் நீதிபதி கேட்க
மணியன் என்று வளுத்தினார் எல்லோரும்
சாட்சிகள் தப்பாமலே சொன்னார்கள்
நீதிபதி திரும்பி நிச்சயமாய் கேட்டாராம்
பொய் சொன்னால் போவீர் சிறைசாலை
சாட்சிகள் பயந்து நடுக்கம் கொண்டார்
பயங்கள் வேண்டாம் பகட்டினார் நீதிபதி
சாச்சிகளை நம்பி விட்டாராம் நீதிபதி
இனி நடக்கும் செய்தி இயம்புகிறேன் உங்களுக்கு
டீஓமோ வரும்படி டெலிபோன் எடுத்தார்

நீதிபதிதானும் நிமிட நேரத்திலேதான்
கதைக்க அவரும் காறில் வாறார் கான்
டீஒமோ அலுகோசி சீக்கரம் வந்தார்
காறில் ஏறி கடுகி வந்தார் அந்த இடம் அம்மானை
நீதிபதி கூறுகிறார் நிமிடநேரத்திலே
சவத்தை வெட்ட தான் ஓடர் விட்டார்
அலுகோசை அழைத்து அங்கே விட்டார்கள்
வெட்டுவதற்கு ஓடர் விட்டார்கள் அம்மானை

### விருத்தம்

அலுகோசி கத்தி எடுத்து அங்கேதான்
சின்னான் பிரேதத்தை சீக்கரம் வெட்ட
தலையை கழட்டுகிறார் ஒருவிதமாம்
உடம்பை பூட்டு பூட்டாகவும் தம்பிமாரே
குடல் வேறாய் குமிக்கிறதும் அங்கே
எலும்புகள் வேறாக எடுத்துமே தான்
சின்னான் பிரேதத்தையோ கண்ணால் பார்
திறமான பயம் உண்டாம் அந்த இடம்.

### விருத்தம்

அலுகோசி சின்னானை வெட்டி அங்கே
சன்னங்கள் உள் இருந்தெடுத்து
மற்றவர்கள் காணாமலே தானும்
வைக்கிறார் நீதிபதி டீஎம்ஒ முன்னாலே
நீதிபதி நின்ற டீஎம்ஒ பொலிஸ் விதானை
மணியனே செய்த என்று மனமது ஒப்பு கொண்டார்
பொலிஸ் இடம் நீதிபதி தானு அங்கே
புண்ணியன் மணியனை தேடிப்பிடியும் என்றார்

### நடை

நீதிபதி கூறுகிறார் நின்ற சனத்தினிடம்
சின்னானை தாக்கும்படி செப்பினோர் அம்மானை
புதைக்கும்படி ஓடர் விட்டார்காண்
ஐயாமார் அங்கே ஆளை தேடலுற்றார்
ஆளுக்கொரு பொல் ஐயாமார் எடுத்து

கைமாஞ்சிகால்மாஞ்சி கத்திகளும் காண்
வேற உடுப்பு விதமாக தான் போட்டுமே
துவக்குகையிலே தோட்டா போட்டாபோல்
இரவு பகலாய் எங்கும் தேடலுறரார்
மாணியன் ஓடினால் காலை முறிக்கவே
சுட்டு பிடிக்க துவக்கு இருக்குதுகாண்
ஆளைபிடித்து ஐயாமார் பதம் பார்கவே
பதறிதிரிகிறார் பாலனைதான் தேடியே
மழையோ வெயிலோ மன்னர்க்கு இல்லை
எங்கு திரிகிறார் இவனைத்தான் தேடி
ஐயாமார்கு ஆறுதல் இல்லை பாரும்
இப்படி இவர்கள் இருந்திடும் நாளையிலே
மணியன் செய்தி வளுத்துகிறேன் அம்மானை
ஆள் படம் கஸ்டம் அன்பாக கேளுங்கள்
மணியன் படும் கஸ்ரம் மக்களே கேளுங்கள்
குமரன் படும் கஸ்ரம் குழந்தைகாள் கேள்
கேட்டு வாழுங்கள் கெட்டித்தனமாகவே
இந்தா வாரான் சுட்ட மணியன் அம்மானை
துவக்குடன் ஆள் சுறுக்காய் பூருகிறான்
காடுவனங்கள் கடுகி நடக்கலுற்றான்
பார்தவர்கள் ஓடுகிறார் பாதகன் வாறான் என்று
ஆர் இடம் போகவும் பயம்கள் வருதுகாண்
கப்பல் இரைந்தாலும் காட்டில் ஓடுகிறான்
ஜீப்பு வருகுது என்ற சுறுக்காய் பூருகிறான்
பயந்து வாடுகிறான் பாலன் மணியனும்
குரங்கு பாய்ந்தாலும் குந்தி இருந்து பார்க்கிறான்
ஐய்யாமார் என்றும் அலறி ஓடுவான்
அன்னம் தண்ணீ இல்ல ஆளுமோவாடியே
பால வனக்காடு பதைக்கிறான் சூரவனம்
குஞ்சி மருக்காலமுள்ளு குதிகளில் தான் ஏறி
நடக்கவும் ஏலா படுக்கவும் ஏலா காண்
உயர்ந்தமரம் தேடி ஓடி ஏறிடுவான்
தண்ணி தாகம் தாங்க ஏலா அம்மானை
காட்டு மடு தேடி கடுகி ஓடிடுவான்காண்.
பகல் இருட்டு இல்லை பாலன் மணியனுக்கு

நித்திரைச் சோகம் நிம்மதி இல்லை காண்
பசிக்கு சோறு இல்லை பாலன் மணியனுக்கு
வீடி சுருட்டு வெற்றிலை இல்லை அம்மானை
சீரான உடுப்பு இல்லை செப்புகிறேன் காண்
ஐயாமார் செய்தி அருள்கிறேன் உங்களுக்கு
ஓடித்திரிகிறார் ஒரு முடிவும் இல்லை காண்
ஊர் றோட்டு ஒன்றும் விடாமலே தான்
பதறி திரிகிறார் பாலனை பிடிப்பதற்கு
நாளுமோ எட்டு பத்து நாடியே போகுது பார்
ஐயாமார் களைத்து அமைதி கொண்டார்கள்
இனி என்ன செய்வோம் என்று இருந்தார்கள்
வேறவர் ஐந்து பேர் வெளிக்கிட்டராம்
மணியனைப் பிடிக்க வாறார்கள் பார் அம்மானை
ஆயுத கருவிகள் அவர்களும் தான் எடுத்து
ஜீப்பையும் எடுத்து சுறுக்காகத்தானுமே
டாங்கி புள்ளாக தம்பியரே பெற்றோல்
காலை ஆறு மணிக்கு கடவுளை தோத்தரித்து
கொலைகாரன் மணியனை கொண்டு தாரும் அப்பா
என்று இறைவனிடம் இரங்கி கேட்டுமே
கேட்டுமே வாரார் கெதியாய் றோவரிலே
காற்றுப்போல் றோவர் கனைத்து வருகுது காண்
காட்டு பாதை கடகிவாறார்கள் அம்மானை
வினை மிருகங்கள் வெருண்டு ஓடுது காண்
பறவை பட்சிகள் பயந்து நடுங்குதுகள்
கல்லு மலைகளிலே காற்றைப் பறக்குது
இந்த விதமாய் இவர்கள் போகையிலே
ஐயாமார் களைத்து அடுத்த வனம் போறார்
பதறிப் போகையிலே பாலகர்காள் கேளும்
சும்மா இருந்து சுட்டார்கள் சத்த வெடில்
சத்த வெடிலும் தம்பியரே வைத்தார்
என்ன நடக்குது என்று இயம்புகிறேன் காண்
மணியன் செய்தி மக்களே கேளுங்கோ
ஆளும்சவுத்து அனுங்கு போலவேதான்
மரநிழலிலே மைந்தன் படுத்தான்பார்
கேட்டது வெடிலும் கிட்டவேதான் என்று

மணியன் எழும்பி ஓடத் துவங்கினான்
ஒரு கட்ட தூரம் மட்டும் ஓடினான் மணியனும்
தம்பியரே ஐயாமார் தானே கண்டார்கள்
கொலை செய்த மணியன் குமாரனை கண்டார்கள்
ஆளுகொரு பக்கம் ஐயாமார் வளைத்தார்
ஓடஏலாமலே விழுந்தான் மணியனும்
கடவுள் தந்தார் என்று கைபிடித்தார் அம்மானை
காப்பையும் கையிலே கடுதியே போட்டு
சங்கிலி காலுக்கு தம்பி மணியனுக்குமே
போட்டு எடுத்தார் புண்ணியர்கள் அம்மானை
இடிம் விழுகுது அலறுகிறான் மணியனும் காண்
சுங்கான் போலே சுறுளுகிறார் மணியனும்
உண்மை கூறு என்று உதைக்கிறார் பளுவிலே
நடுங்குது எலும்பு மழையிலே நனைத்தா போல்
பதறுகிறான் மணியன் சுட்ட மிருகம் போல்
தட்டி பதம் பாக்கிறார் தம்பியின் பளுவெல்லாம்
நான் தான் செய்த என்று நன்றாய் கூறும்படி
அடித்து ஐயாமார் அங்கே களைக்கலுற்ரார்
போவோம் இனி என்று புகழாய் மணியனையும்
றோவரில் ஏத்தி சுறுக்கா வந்தார்கள் காண்
பொலிஸ் வீடு கொண்டு வந்தார்கள் அம்மானை
கொண்டு வந்து குமாரன் மணியனையுமே
வீட்டார்கள் இறக்கி விளுகுதடா பாணம்
இருந்த ஐயாமார் எழும்பியே வந்தார்களாம் காண்
அவர்களும் சவுத்து அங்கே இருக்கயிலே தான்
சீவன் மட்டுமே போகவில்லை செப்புகிறேன் அம்மானை
அப்படியே அவர்கள் அங்கே இருக்கையிலே பார்
ஐ பீ துரையும் அங்கே வந்தாராம் காண்
வாடா இங்கே என்று மணியனைத் தான் இழுத்து
பாணம் அவரும் பாலனுக்குக் கொடுத்தார்
கொடுத்து அவரும் கொப்பியைத் தான் எடுத்து
எடுத்து எழுதுகிறார் மணியன் விளக்கம்
செய்த விதங்கள் செப்புகிறான் அம்மானை
நடந்தது எல்லாம் தப்பாமல் அங்கேதான்

தம்பி மணியனும் சாற்றுகிறான் ஐயாவிடம்
எழுதி முடித்தார். ஐபீ துரையுமே காண்
இனி நடக்கும் செய்தி இயம்புகிறேன் அம்மானை
றூம் ஒன்றில் தள்ளி சுறுக்காய் பூட்டி விட்டார்
மணியனும் அங்கே மந்திக் குரங்கு போலே காண்
குத்திக் கொண்டு இருக்கான் குமாரன் மணியனும்
வளைத்து பார்தான் மக்களே சுவர் தான்
கதவு மட்டும் கண்பார்கவே ஓட்டையடர்
இப்படி இவனும் இருக்கின்ற வேளையிலே
சாப்பாடு அங்கே சடுதியில் வருகுது காண்
கொண்டு கொடுத்தார் குமரன் மணியனுக்கு
ஆசையாய் வாங்கி அவனும் குலைத்தான் காண்
மீன் இறைச்சி இல்லை வெறும் சோறு காண்
சம்பலும் சொதியும் தான் இருக்குது காண்
கடவுளே என்று கண்ணைத் திறந்து அவனும்
சாப்பிட்ட அவனும் தாகம் தீந்தான் காண்
உறங்க அவருக்கு ஒரு நிமிடம் இல்லை பார்
வளைத்துப் பார்கையிலே மன்னர்காள் கேளும்
எங்கிலும் மூட்டை இரவாய் இருக்குது காண்
பார்த்தான் மணியன் பயங்கள் வருகுது அம்மானை
ஐயாமார் அடியில் அங்கே புளிச்ச இரத்தம்
ஓடிவருகுது உருண்டு விழுகுது காண் அங்கே
இடியும் கடியும் எங்கிலும் முட்டை காண்
இருந்து விடிய வைத்தான் ஏங்கிய மணியனுமே
காலை ஆறு மணி கணக்கு வந்தது அம்மானை
ஐயா ஒருத்தர் அங்கே வந்தாராம் காண்
கதவைத் திறந்து தம்பி மணியனை தான்
மலசலம் கழிக்க மணியனைத்தான் விட்டுமே
காலைச் சாப்பாடு மணியனுக்கு அங்கே காண்
கொண்டு கொடுக்கின்றார் குமரனுக்கு அம்மானை
நாலு அவுன்சி பாண் தேநீர் கூடவே காண்
கொடுத்தார் அங்கே குமரன் மணியனையும்
காப்புக் கையிலையே கடுகியே போட்டெடுத்து
கோட்டுக்குக் கொண்டு போகின்றார்கள் அம்மானை
இனி நடக்கும் செய்தி இயம்புகின்றேன் காண்

கோட்டிலே கொண்டு மணியனைத் தானும்
கூட்டுக்குள் போட்டு குமரனை அங்கே
மாஞ்சை அவுட்டு மணியனை வைத்தார்கள்

## விருத்தம்

கோட்டிலே ஐயாமார் கொண்டுமே மணியனை
கூட்டுக்குள் போட்டு குமரனுக்கும் காவல்
பிசுக்கால்மார் பிசகாமல் காவல் இருக்க
கோடுமே கூடுது பார் குமரர் காள் கேளும்

நேரமும் ஒன்பது மணி நீதிபதி வஞ்சியில் ஏற
அப்புக்காத்து பெருக்குளாசிகளும் அங்கே
வளைத்துமே ஐயாமார் அழகாய் இருக்க
மௌனங்களோடு வாய்மூடி இருந்தார் பார்

மணியன் கொப்பியை வாசித்தார் முதலியார்
நீதிபதி பார்த்துத்தான் வழுத்தினார் வசனம்
பதினான்கு நாள் உமக்கு ரிமாண்டென்றார்
சிறைச்சாலை கொண்டு போக செப்பினார் நீதிபதி

## நடை

அந்த மொழி கேட்டு அங்கிருந்த பிசுகாலும்
பிசுகாலும் ஓடி வந்து பிசகாமல் பிடித்து
மாஞ்சையும் போடுகிறார் மணியனுக்கு அம்மானை
காப்பையும் போட்டு காவலர் அங்கே
வேனையும் எடுத்து வேகமாய் ஏத்தியே தான்
சிறைச்சாலை கொண்டு போறார்கள் காண்
கொண்டு இறங்கி குமாரன் மணியனையும்
சிறைசாலை உள் விட்டார் செப்புகிறேன் காண்
பார்தான் மணியன் பயம் வருகுதடா
தெய்வலோகம் போலே தெரியுது கண்ணுக்கு
தத்தளித்து அவனும் தடுமாறி நிற்கையிலே காண்
கேற்றில் இருந்த ஐயா கிட்ட இழுத்துமே
பேர் அதனைக் கேட்டு பிசகாமல் தான் எழுதியே
ஆளில் உள்ள அடையாளம் தான்

எல்லாம் எழுதி முடித்தார் காண் அம்மானை
உடுப்பு முழுதும் உரிய வைத்தாராம் காண்
வெக்கமே பார்தால் வேண்டி முடிய வேணும்
எல்லா சிறையிலும் இந்த விதமாம் காண்
பாத்துமே எழுதி பாலன் மணியனையும்
எஸ்பி யிடம் கொண்டு விட்டார்களாம் காண்
அவரும் எழுதி முடித்தார் காண் அம்மானை
மணியனும் அங்கே வந்து நிற்கயிலே பாரும்
பார்த்த முகம் எல்லாம் வேற்று முகமாம் காண்
ஆரோடு கதைக்கவும் ஏலாமல் நிற்கவே தான்
கூட்டி ஒரு ஆள் கொண்டு விட்டானாம் பார்
விட்டான் மனேச்சர் இடம் வீரனையும் அம்மானை
சாப்பாட்டு பீங்கான் தண்ணி எடுக்கடின்னும்
தேத்தண்ணீ யொக்கு சிராக தான் அங்கே
தும்பு தலையாணை பாயும் கூடவே தான்
கொடுத்து அங்கே குமாரன் மணியனையும்
காவலாளி கூட்டி காட்டுகிறார் றூம்
இது தான் றூம் இரியும் என்றார் அம்மானை
அங்கே மூன்று பேர் அவரும் இருத்தராம்
நான்கு பேர் றூமில் நன்றாய் இருந்தார்
நாளும் பதிநான்லு நாள் இருப்பதென்று
மணியனும் அங்கே வடிவாய் இருந்தானாம்
கூடி இருக்கும் ஆட்களோடு மணியனும்
பதிநாலு நாள் நான் இருப்பேன் என்று
பாலன் மணியனும் பகரலுற்றான் அம்மானை

## விருத்தம்

மணியனும் சிறையில் இருக்கத்தான் அங்கே
வைத்த தொரு பெண்பிள்ளை தாய் தகப்பன்
மனமது பேதலித்து மண்டாடி கடவுளை
பெருக்குதோர் வைக்க போவாறாம் பிள்ளைகாள்.

## நடை

அலைந்து போறார்கள் ஐயா இருக்கும் இடம்
போனார்கள் ஐயா இடம் புண்ணியகள் அம்மாணை

ஐயாவைக் கண்டு அன்பாய் கூறலுற்றார்
ஆண்டவரை போலே ஐயாவே நீங்கள்
கொலை வழக்கு ஒன்றில் குமரன் பட்டான்
சிறையில் இருக்கிறான் செப்புகிறேன் ஐயா
மறியல் தூக்கு இல்லாமல் மயிந்தனை நீங்கள்
காலை பிடித்தோம் கடவுள் போல நீங்கள்
குற்றங்கள் வாராமல் குமாரனை தாருங்கள்
புண்ணியம் கிடைக்கும் புகழ் பெரிய ஐயாவே
பிச்சை ஆகுதல் எடுத்து பிள்ளைக்கு ஆகத்தான்
சொல்லும் பணம் சுறுக்காய் கட்டுவோம்
வேற இடம் போக விருப்பமே இல்லாமல்
உங்கள் இடம் வந்தோம் உண்மை இது என்றார்
கதைத்து முடிந்து கண் கலங்கி அவர்கள்
கடவுளே முருகா என்று கதறினார் அம்மானை
தம்பியரே கேளும் சாற்றுகிறார் ஐயாவும்
சின்ன வழக்கு என்று எண்ண வேண்டாம் காண்
பொறுப்பு வழக்கு மேடர் என்பது தான்
என்னாலே முடியும் என்று. இயம்பினார் அம்மானை
நல்லது உங்களுக்காக நானே வாதாடியே
குற்றம் இல்லாமல் குமாரனை தருவேன்
கீழ் கோட்டில் நான் வென்று தருவேன்
பயங்கள் தேவையில்லை பாலனை நான் தருவேன்.
இன்னம் அனேக மேடர். இக் கோட்டில் நான்
பேசி வென்றடதுண்டு. பேதலிக்க வேண்டாம் காண்
சிலவை நீங்கள் சீக்கரம் கட்ட வேணும்
என்னால் ஏலாமல் எதுவும் போனதில்லை
தவணை கணக்கு உங்களுக்கு தேவையில்லை
மொத்தமாய் பணம் முழுதும் கட்டவேணும்
விசாரித்துப் பாரும் வேணும் என்று கூறவில்லை
ஆக குறைந்தது பத்தாயிரம் காண் அம்மானை
கூடிய கெதியில் குமாரனை தருவேன்
கட்டி இருந்து பாரும் கவலை தேவையில்லை
விரும்பாவிட்டால் வேற இடம் பாருங்கள்
என்று ஐயாவும் இயம்பினர் அம்மானை

அந்த மொழி கேட்டு அம்மையும் அப்பனும்
ஏங்கி விறச்சி இரும்பாகி நின்றராம்
என்ன கெதி என்று ஏங்கி விறச்சியே
கவலையும் கூடி கண் கலங்கி நின்றராம்
ஆள் ஆள் பேசாமல் அங்கே இருக்கவே
ஐயா வசம் கூறி அங்கே இருந்தார்
இருக்கார் ஐயாவும் என்ன நடக்குதென்று
அடுத்த கதை பேசயில்லை ஐயாவும் அம்மானை
இதற்கு குறைய இவர்க்கு விருப்பம் இல்லை
நின்று தடுமாறி நெடு மூச்சி விட்டுமே
போய்வறோம் என்று புறப்பட்டு வாறார் அம்மானை
கவலைப்பட்டு கழண்டு வாறார் அம்மானை
வீட்டுக்கு வாறார் வேதாளம் போலே
இனி என்ன செய்வோம் எடுக்கின்றார் பணம்
பொருள்கள் விற்றுபணமும் தான் எடுத்து
அடுத்த நாள் காலை ஐயாவிடம் போறர்
ஐயா விடம் போய் அருமையாய் பேசியே
காசயும் எண்ணி கையில் கொடுத்தாராம்
ஐயாவும் வாங்கி அழகாய் வைத்தாரம்
விட்டுக்கு போய் விடிய காலையிலே
கோட்டுக்கு வரும் குமாரனை தருவேன்
வருகிறார் தாய் தகப்பன் மக்களே கேளும்
கோயிலுக்கு போறா கும்பிட்ட கை ஒடு
ஐயரை பிடித்து அருமை மகனுக்கு
ஆறு நேரம் அர்ச்சனை அழகாய் போட வேணும்
தப்பாமல் போட வேணும். சனியனுக்கு ஐயாவே
பணமும் கட்டி பதறி வாறார்கள் அம்மானை
சாத்திரி மார் இடம் தம்பியரே போறாராம்
அதிலும் சிலவுகள் நடக்குது பாரும் காண்
இப்படி இவனும் இருந்திடும் வேளையில்
மணியன் செய்தி வளுத்துகின்றேன் அம்மானை
தவணைஅன்று தம்பி மணியனை தான்
மாடு பிணைப்பது போல் மணியனை தானுமே
இன்னம் ஒருத்தர் இவரோடு பிணைத்து
சாய்து வாறார்கள் தம்பியரே கோட்டுக்கு

கூட்டுக்குள் போட்டு பிணையை அவுட்டு
கோடு கூடும் வரை குமாரன் மணியனுக்கு
காவலோ அங்கே பார்க்க ஏலா அம்மானை
இப்படி இவர்கள் இருக்கிற வேளையிலே
மணியன் வழக்கு பார்க்க வாறார்கள் மக்களுந்தான்
தாய் தகப்பன் தவித்துமே வாறார்கள்
தேத்தண்ணீர் சாப்பாடு சீராக தான் எடுத்து
கோட்டிலே இன்றைக்கு குமாரன் கழிவான்
என்றுமே எண்ணி வாறார்கள் அம்மானை
கோடு கூடமுன் குமாரன் ஓடு கதைக்க
பதறி வாறார்கள் பாலனை காண்பதற்கு
வந்து சேர்ந்தார்கள் மக்களே கோட்டுக்கு
காவலாளி உடன் கதைக்க கேட்டு
கூட்டுக்கு கிட்ட போய் குமாரனோடு கதைத்தார்
பயம் தேவையில்லை கீழ் கோட்டிலே
ஐயா பெருகுதோர் வயித்து இருக்கிறோம்
என்றுமே சொல்லி இன்பமாய் பேசி
தேத்தண்ணீர் குடிக்க செப்பினார் அம்மானை
கண்டார்கள் ஐயாமார் கண்கள் பொரி பறக்க
ஆர் இடம் கேட்டு கொடுத்தீர்கள் என்று
பள்ளிக்கு நீங்களும் பாலன் ஓடு போவீர்
என்று அவர்கள் அதட்டலுற்றார் காண்
பயந்து நடுங்கி பதறினார் அம்மானை

## விருத்தம்

ஒன்பது மணியடியும் ஒன்றாய் விழியிலே
அப்புகாத்து பொருக்குதோர் கூட்யில்
வஞ்சியில் நீதிபதி வகை உடன் தானும்
மணியன் வழக்கை வாசித்தார் முதலியும்

## நடை

வழக்கையும் தான் வாசித்தார் அம்மானை
பெருக்குதோர் பேசலுற்றார் காண்
நீதிபதி பார்த்து நிச்சயமாய் கூறுகிறார்

சாட்சிகள் சரியா விளங்கவே
சம்மன் அனுப்பி சடுதியில் எடுக்க வேனும்
பெருக்குதோர் தவணையும் கேட்டாராம்
மணியனிடம் வளுத்தினார் பெருக்குதோர்
தவணை விழுந்தது தம்பியரே கேளும் காண்
உமக்கு என்ன கவலை யோசிக்க வேண்டாம்
வழக்கை நானும் வகையாய் பேசிடுவேன்
என்று மணியனிடம் இயம்பினார் அம்மானை
கூறி முடிவிலே குமாரன் மணியனையுமே
சிறைசாலை கொண்டுமே போறார்கள்
மணியனும் அங்கே மனது துணிவு கொண்டு
கூடி இருக்கும் ஆள் ஓடு குமாரன் மணியனும்
இன்னம் பதிநாலு நாள் இருக்கதான் வேனும்
பேருக்குதோர் வயித்து இருக்கிறார்
வாற தவணையில் வெளியில் எடுப்பார்
என்று மணியனும் இயம்பினான் அம்மானை
இப்படி இவனும் இருந்திடும் நாளையிலே

## விருத்தம்

மற்றதோர் தவணையும் வருகுது பாரும்
ஓடியே வருகுது பதிநாலு நாளுமே
வழக்கம் போல மணியனையும் எடுத்து
மணியனை கொண்டு போறார்கள் கோட்டுக்கு

## நடை

தவணை நாளும் தம்பியரே வந்தங்கே
மணியனை அங்கே கொண்டு போறார்
எல்லோரும் கூடி இருந்தனர் அம்மானை
மணியன் வழக்கை மன்னர்கள் எடுத்து
டீஓமோ விளக்கம் கூட்டிலே ஏத்தி
அன்று விளக்கம் அவர் மட்டும் அம்மானை
அடுத்த தவணை அங்கே விழுத்ததுவாம்
இன்னம் பதிநாலு நாள் இழுத்து விட்டார்
சிறைச்சாலை மணியன் சீக்கரம் கொண்டு
கொண்டு போறார் குமாரன் மணியனை

இருந்து வளர்கிறான் இன்பமாய் தான்
ஏங்கி அவனும் இருந்திடும் நாளையில்
நாளும் பதினாலு நாடி வந்ததாம்
அன்று எல்லோரும் அழகாய் கூடினராம்
வடிவாய் கூடி வழக்கையும் எடுத்து
கிராம சேவை ஆளர் அன்று விளக்கமாம்
மற்றதவணை விழுகுது பாரும் காண் அங்கே
இன்னம் பதினாலு இழுக்கிறார் அம்மானை
ஓடி வந்ததாம். மற்ற தவணை பார்
ஒண்டித்து எல்லோரும் ஒன்றாய் கூடியே
பொலிசி விளக்கம் அன்று நடக்குது
அப்படியே போகுது அந்த தவணையுமே
மற்ற தவணையும் எஸ்ஜ விளக்கம் அம்மானை
இப்படி தவணையும் நாளும் போகுது பார் காண்
தவணையும் முப்பத்தைந்து தான் விளவே
தானே விளவும் தத்தாளித்தார் பாரும்
நீதிபதி பார்த்து நிட்சயமாய் கூறுகிறார்
என்னால் முடியாது தீர்ப்பு கூறுகிறார்
கம்பிறியன் கோட்டு சுறுக்காய் வந்து விடும்
பாரப்பண்ணிவிட்டேன் சிறச்சாலை போகுது
அந்த மொழிகேட்டு உடனே பொலிசார்
மணியனை கூப்பிட்டு மன்னர்கள் அங்கே
ஆள் உயரம் அடையாளம் தாள் எடுத்து
எல்லாம் எடுத்து எழுதினார் அம்மானை
கொழும்பு போகுது கொப்பியும் காண்
மணியனையும் அங்கே சிறைச்சாலை கொண்டு போறார்
ஏங்கி மணியனும் இருந்து வாடுகிறான்
கொமிற்றா் வருகுதென்று குமாரன் மணியனும்
ஏங்கியே வாடுகிறான் இயம்புகிறேன் காண்
வருசமும் அங்கே இரண்டு ஆகுது பார்
வாலவயது மணியன் வயது முதிந்தவன் போல்
தலைக்கு எண்ணையில்லை தம்பியரே கேள்
ஏழு நாளைக்கு இயம்பிடுவேன் உங்களுக்கு
சிறுகரண்டி ஒன்று ஒருதரம் வைக்கவே

குமாரி சோப்பு ஒரு துண்டாம் அம்மானை
கிழமைக்கு ஒரு தரம் கிடைக்கும் காண்
குளிப்பு முழுக்கு சீரில்லை குமாரனுக்கு
வக்குகளில் தண்ணி மக்களே கேளுங்கள்
அளவு மீறிக் குளித்தால் அடியும் விழுகுமாம்
எட்டுப்பத்து டின் இருந்து குளிக்க வேணும்
இப்படி இருந்து இவனும் வாடயிலே
பகலும் இரவும் பதறுகிறான் மணியன்
கவலை மீறியே கண்ணீர் வடியுது அம்மானை
இப்படி இவனும் இருந்து வாடயிலே.

## விருத்தம்

மணியன் வழக்கு சுப்பிறியன் கோட்டு போனதனாலே
பிள்ளைக்கு பொறுப்பு பேதலித்து தாய் தகப்பன்
ஏங்கியே அழுகிறார் இனி என்ன செய்வதென்று
பணமும் இனிதான் சிலவு பகருகிறேன் உங்களுக்கு

## நடை

பெரிக்குதோர் ஐயா தாய் தகப்பனை அழைத்து
அய்யாவும் அங்கே அருள்கிறார் மொழிகள்
இந்த வழக்கு பொறுப்பாய் இருக்குது
மேடரும் இது பொறுப்பு என்றார் அம்மானை
கோட்டில் கொப்பி எடுத்து வைக்க வேணும்
அப்புக்காத்து ஒருதர் அங்கே வைக்க வேணும்
கேக்கும் பணம் கெதியாய்க் கட்டும் அம்மானை
சுப்பிறியன் கோட்டில் சுறுக்காய் கழியலாம்
வெற்றி எடுக்கலாம் கவலை தேவையில்லை
உதறி வைத்து இருக்கிறேன் பாரும் காண்
பயங்கள் தேவையில்லை பாலன் வருவான்
இந்தவிதமாய் பெருக்குதோர் ஐயாவும்
கதைத்து அங்கு கழண்டு விட்டார் அம்மானை
அந்த மொழி கேட்டு அங்கே தாய் தகப்பன்
மறுத்து மொழி பேசாமல் மவுனமாய் தானும்
அவின் தின்றவர் போல ஆளை ஆள் பேசாமல்

கோட்டுக்கு வந்து கொப்பியைத் தானெடுத்து
பணமும் கட்டியே பதைத்துமே போறார்கள்
வீடு போய் சோர்ந்து விரும்பி இரு பேருமே
முதியோர் தேடிய ஆதனமும் முற்றும் விற்று
பணமும் பையிலே கட்டி பாலனுக்கு ஆகவே
அப்புக்காத்துவிடம் அவர்கள் போயிமேதான்
கொப்பியைக் கொண்டு கொடுத்தார் அம்மானை
அய்யாவும் வாங்கி படிக்கலுற்றார் காண்
படித்து அய்யாவும் பகலலுற்றாராம் அங்கே
கடவுளைக் கேளும் கடும் பொறுப்பு வழக்கு
பெருக்குதோர் என்னோடு பிடித்து தரவேணும்
அவருக்கும் பணம் அங்கே கட்டும் காண்.
றெடியாய் இருக்க வேணும் செப்புகிறேன் காண்
இருபது ஆயிரம் இப்பவே கட்ட வேணும்
வாடி வீடு சிலவு வழுத்துகிறேன் காண்
ஒரு நாளைக்கு ஆயிரத்து ஐனூறு காண் அம்மானை
பேசும் நாளைக்கு பிசகாமல் கட்ட வேணும்
கட்டி முடிக்க வேணும் கட்டாயம் நீங்கள்
பயங்கள் தேவையில்லை பாலனை நான் தருவேன்
வெளியே தருவேன் பேதலிக்க வேண்டாம் காண்
என்னால் ஏலாமல் எதுவுமே போனதில்லை
அந்தக் கோட்டில் அநேகம் வழக்கு நான்
வெற்றி எடுத்தது விசாரித்துப் பாரும் காண்
கொள்ள புத்தி வேண்டாம் குளறத் தேவையில்லை
வழக்கோ பொறுப்பு மகன் தேவையானால்
பணத்தைக் கட்டும் பாலன் வருவான் காண்
இந்த மொழி கேட்டுத் தாயும் தகப்பனும்
ஐயாவே நாங்கள் பத்து ஆயிரம் தான்
கொண்டு வந்தோம் குறைகள் எண்ணாதீர்
ஊருக்குப் போய் ஒன்றும் குறையாமலே
நம்பிக்கையாக நாங்கள் கட்டிடுவோம்
ஐயாவும் கதை கேட்டுப் போகும் என்றார் அம்மானை
போய் வாறோம் என்று கோச்சுமே தானேறி
பேய்ரூபம் போல பேதலித்து வாறார்கள்
பெருக்குதோர் ஐய்யாவிடம் பிள்ளைகள் வாறார்

அய்யாவும் கண்டு அன்பாய் அழைத்தாராம்
போன செய்திகள் புகலும் என்றார் அம்மானை
தாய் தகப்பன் அங்கே சாற்றுகிறார் வசனம்
நீங்களும் சொன்னபடி நிச்சயமாகவே தான்
அப்புகாத்து பிடித்தோம் அய்யாவே நாங்கள்
காசும் பத்தாயிரம் கட்டி இருக்கிறோம்
இன்னம் பத்து கட்ட வேணும் ஐயாவே
உங்களையும் அவர் ஒண்டிக்கச் சொன்னார்
இருபேரும் சேர்ந்து எங்கள் பிள்ளையை
கையெடுத்தோம் கழட்டித்தாரும் ஐயாவே
என்ற மொழி கேட்டு இயம்பினார் ஐயாவும்
எமக்கு சிலவு எவ்வளவு என்றாராம் காண்
ஏங்கி முழிசுகிறார் என்ன புதினம் என்று
பெருக்குதோர் ஐயா பேசுகிறார் அம்மானை
கொலையோ செய்து குளுமாஞ்சி போடுகிறீர்கள்
மகனை செய்ய வைத்து மகுடி போடுகிறீர்
பள்ளிக்குப் போகப் போறீர் பாருங்கோ நீங்களும்
ராசாவும் உங்களை தப்பாமல் அனுப்புவார்
என்று ஐயாவும் இயம்பினார் அம்மானை
ஐயா மொழி கேட்ட அம்மையும் அப்பனும்
ஏங்கி விறைச்சி இருபேரும் தான் குளறி
ஐயா காலில் இருபேரும் தான் விழுந்து
நீங்களே இந்த வழக்கு நிச்சயமாகவே
வெல்லுவீர் என்று விரும்பி வந்தோம்
இந்த கதைகள் ஏன் ஐயா கூறுகிறீர்
என்றமே ஐயாவை இருபேரும் கைகூப்பி
வீடுமே வாறார்கள் வேதாளம் போல் அம்மானை
அம்மையும் அப்பனும் ஆதனங்கள் விற்று
முதியோர் தோட்டம் முற்றுமே விற்று காண்
நாற்ற மீன் விற்றார் போல் கெட்டதில் பாதி
ஆதனம் விற்று அங்கே பணம் எடுத்துமே
பெருக்குதோருகும் பிள்ளைகள் கட்டுகிறார்
அப்புக்காத்து கேட்டபணம் அங்கே கட்டுகிறார்
இலங்கையில் உள்ள கோயில்கள் எல்லாமே

அர்ச்சனை போட அது வேற பணம் அம்மானை
பதறித்திரிகிறார் பாலனைத்தான் கேட்டு காண்
குமாரன் மணியனுக்கு கொமிற்றர் வருகுது
கொண்டு கொடுத்தார்கள் குமாரன் மணியனுக்கு
வாங்கி படித்தான் மயிந்தன் மணியனுமே
பயங்கள் கொடுக்குது பாலன் மணியனுக்கு
இந்த விதமாய் இருக்கின்ற நாளையிலே காண்
நாளுமோ ஓடி நாடி வருகுதங்கே
சுப்பிறியன் கோடு சுறுக்காய் கூடினது
தம்பி மணியனையும் சடுதியில் அங்கே தான்
ஐயாமார் மாஞ்சுடன் ஐந்து பேர் கொண்டுமே
கோட்டுக்கு கொண்டு கூட்டுக்குள் போட்டார்
அப்பு காத்து மார்கள் அங்கே கூடினாரம் காண்
தாய் தகப்பன் எல்லாம் தவித்துமே வாறார்கள்
வழக்கு பார்க்வே வாறார்கள் சனங்கள்
செத்தவன் ஆக்கள் சீராய் வாறார் காண்
வழக்கு பார்க்கவே வாறார்கள் அம்மானை
கோடு நிறையுது குமாரன் வழக்கு பார்க்க
இன்றைக்கு குமாரன் வெளியே வருவான்
என்று இனசனம் இன்பமாய் பேசியே தான்
சனங்கள் எல்லாம் தான் இருந்தார் அம்மானை

## விருத்தம்

ராசாவும் வஞ்சில் ஏற சடுதியில் யூரிமாரும்
வட்டமேசை போட்டு மன்னர்கள் வீற்றிருக்க
பெருக்குதோர் அப்புக்காத்து பேரான கீறவுந்தான்
முதலி பொலீஸ் முற்றும் கூடினராம்

## நடை

யுரிமார் எழுபேர் ஒன்றாய் இருந்தார்
ராசாவும் வஞ்சியில் சடுதியில் ஏறலுற்றார்
முதலியார் அதன் கீழ் அப்புக்காத்துகளும்
துவக்கோடு சுற்றிப் பொலிசாரும்
கட்டுமானம் வைத்துக்கத்துகிறார் குழல்

எல்லாம் முடிவில் எடுத்தாரே முதலி
வழக்கு கொப்பியை வகையாக தான் எடுத்து
விசாரணை செய்ய வேண்டி நின்றார் காண்
ராசாவும் வாங்கி தானே பார்கலுற்றார்
அப்புக்காத்து இருபேரும் அழகாய் பேசுகிறார்
தட்டிப் பேசுகிறார் கிறவுன் தானுமங்கே
யுனிமார் கவனம் ஒன்றாய் இருக்குது
வழக்கு நடக்குது மணியன் என்பவருக்கு
இரண்டு நாள் விளக்கம் நடக்குது அம்மானை
வழக்கும் பொறுப்பு மன்னர்காள் கேளும்
ராசாவும் கூறுகிறார் சடுதியில் அந் நேரம்
சுட்ட இடம் பார்க்க சுறுக்கா போக வேணும்
போக வேணும் என்று புண்ணியங்கள் தானும்
ஆழுககொருகாறு அழகாய் ஏறலுற்றார் காண்
முன்பின் பொலிஸ் முற்றுமே போறார்களாம்
அந்த இடம் பார்த்து அன்பாய் வந்தார்களாம்
கூடிய யூ னிமாரிடம் ராசாவும் கேட்டாராம்
மூன்றில் இரண்டு முற்றும் குற்றம் என்றாராம்
அப்புகாத்து அங்கே அருள்கிறார் வசனம்
பார்தார் பொறுப்பு பாலகனைத் தப்ப வைக்க
மறியல் கேட்டு வழுத்தினார் காண் அம்மானை
ராசாவுக்குப் பதில் கூற தம்பியரே எலாது
எழுதி முடிக்கிறார் என்னவென்று கூறிடுவேன்
ராசாவும் எழுதி தம்பியரே முடித்தாராம்
எழுதி முடிக்கிறார் என்ன என்னறிடுவேன் காண்
முதலியார் அங்கே வாசனை கூறுகிறாராம்
போகம்பறைகண்டி புண்ணியர் கூறுகிறார்
நாலு பக்கம் சுவர் நடியே உன்னை தானும்
கப்பியில் கயிறு கழுத்திலே தான் போட்டுமே
உயிர் போகுமளவு உன்னை தூக்கப்படும் காண்
முதலியாார் வாசனை முற்றும் முடிந்தது பார்
அப்புக்காத்து அங்கே அருள்கிறார் வசனம்
ராசாவே அப்பில் தாருமென்றார் அம்மானை
எடுங்கள் அப்பில் இயம்பினார் ராசாவும்
அப்புக்காத்து மணியனிடம் அருள்கிறார் வசனம்

பயங்கள் வேண்டாம் பாலா நீ கேளும்
அப்பில் கோட்டில் ஐயா எடுப்பார் உன்னை
நான் அல்ல வேறவர். நம்பி இரியும் காண்
எல்லா ஒழுங்கும் நானே செய்வேன்
பணம் மட்டும் தேவை பயம்கள் தேவை இல்லை
தாய் தகப்பன் எல்லாம் சரியாய் நடத்துவார்
கவலை இல்லாமல் கண்டியில் இரியும் என்றார்
அப்பில் எழுதி விட்டு ஐயா களண்டு விட்டார்
இனி நடக்கும் செய்தி இயம்புகிறேன் காண்
தாய் தகப்பன் அங்கே தவிக்கிறார் பாரும்
பெண்டாட்டிதானும் பிரளுகிறார் வீதியிலே
பிள்ளைகள் எல்லாம் ஏங்கிவிறைக்குது
கூடபிறந்தவர்கள் குளறிதிரிகிறார்கள்
இப்படியி இங்கே நடக்கிற வேளையிலே
மணியன் செய்தி வளுத்துகிறேன் அம்மானை
ராசாவும் மணியனுக்கும் மரண தண்டனை
எழுதி முடித்த உடன் என்ன நடக்குது
பிசுக்கால் இருபேர் பேய்போல் பிடித்து
மயிந்தன்மணியனுக்கு மாஞ்சையும் போட்டு
துவக்கோடு பொலிஸ் இருபேர் பக்கத்திலே
மறியவீட்டு காவலர் மறுபக்கம் காவல் காண்
வேன் ஒன்று எடுத்து வேகமாய் தானும்
கொண்டு போறார்கள். கண்டிபோகம்பறை
மாளவேபோறான் மணியனுமே அம்மானை
ஏங்கி அவனும் இரும்பாக்கி இருதான்காண்
கொண்டு இறக்கினார். கண்டிபோகம்பறை

மாளவேபோறான் மணியனும் காண் அம்மானை
கேற்ரை திறந்து கெதியாய் அவரையுமே
உள்ளேவிட்டு உரிகிறார்கள் அம்மானை
உடுப்பை உரிகிறார். ஒன்றும் இல்லாமலே
மணியன் உடுப்பை மக்களே உரிந்துமே
கட்டவே சாறன் கொலர் இல்லாசேட்டுமே
போருக்க வெற்சீற் புகளகதானும் அங்கே

கட்டி குளிக்க பென்றருமாம்காண் அம்மானை
எல்லாம் கொடுத்து எழுதி முடித்தார் பார்
இனிநடக்கும் செய்தி இயம்புகிறேன் காண்
கேற்றுமோ ஏழு கெதியாய் திறந்துமே
ஆளையும் கொண்டு அழகாய் வைத்தார்
ஒன்பது அடிறூம் உறுதியாய் அவர்கு தான்
கக்கூசி அதற்குள் மலசலம்களிக்கவே
பாய் கோப்பைடின் படுக்கத்தலையாணை
பாடம் கீறகொப்பி பாலனுக்கு அம்மானை
புத்தகம் பேனை கலர் பெட்டிகளுமே தான்
தேவமட்டும் சாப்பாடு சீராய் நடக்குது
மாதம் இரண்டு தரம் மயிரைவெட்டுவதும்
சேவுஇரண்டு நாள் சீராய் எடுக்கிறார்
பரிசோதகர் அங்கே பார்வை செய்வதும்
டீஓமோதானும் சீராய் வருகிறார் கூறுகிறேன்
இரண்டு தரம் திறப்பார் மணியனை அங்கே
பதின் ஐந்து நிமிடம் பாலன் மணியனுக்கு
குழித்து முழுக கும்பிட கடவுளை தான்
இரவும் பகலும் இலற்றிவெளிச்சம் காண்
தூக்கும் ஆள்போட றூமும் இருபத்தி நாளும்
இருபத்திநாலுறூம் இருக்குது காண் அம்மானை
பாடும் மண்டபம் பாலனுக்கு வேறகாண்
தூக்கும் மேடவேற இருக்குதுபாரும்
மணியன் மூளை எல்லாம் மாளுதே அம்மானை
நித்திரை இல்லாமல் நின்று தவிக்கிறான்
இரவும் பகலும் எண்ணுது மூளை எல்லாம்
அப்பில் முடிவும் இல்லை ஆரோடும் கதை இல்லை
பயம்கள் கொடுக்குது பாலன் மணியனுக்கு
மாதமும் ஆறு சென்றதுவாம் காண் அம்மானை
தாய் தகப்பன் தவித்து வாறார்கள் அங்கே
உள்ள ஆதனங்கள் ஒன்றும் வையாமலே
விற்றுபணம் எடுத்த வேகமாய் போறார்கள்
கொழும்பு அளுகடைக்கு கொண்டு போறார்கள்
அங்கேயும் அப்புகாத்து அவர்கள் வைத்துமே
எல்லாம் கொடுத்து இருக்கிற வேளையிலே

நாளும் களண்டு நாடி வந்து காண் அம்மானை
அப்பில்கோடும் அங்கே வந்ததுவாம்பாரும்
மணியனுக்கு ஓடர் வந்தது அப்பிலுக்கு
அயிந்துபேர் ஆக்கள் அழைத்து மணியனையும்
துவக்கோடு காவல் துரிதமாகவே தான்
வேறஉடுப்பும் விதமா போட்டுமே காண்
கைய்குமாஞ்சி கூடவே போட்டெடுத்து
வேனில் ஏத்தி வேகமாய் போறீர் காண் அம்மானை
கொழும்பு அழுக்கடை கொண்டு போறார்கள்
அப்பில் கோடு அங்கே இருக்குதுபாரும்
மாளிகை மூன்று தட்டு வகையாய் இருக்கு
கீழே ஒரு ராசா மேலே மூன்று ராசாவாம்
அதன் மேலே ஏழு ராசா அழகாய் இருக்கு
மூன்று ராசாவிடம் தம்பி மணியனையுமே
கொண்டு வைத்தார்கள் குமாரனை அம்மானை
இரும்பு கூடு இருக்குது *மணியனுக்குமே
ராசாக்கள் பார்க்க சரியாய் இருக்குது
மணவறவஞ்சியில் மன்னர்கள் தான் இருந்து
பெண்கள் இருபேர் முதலி அதன் கீழே காண்
அப்புகாத்து எழும்பி அருள்கிறார் வசனம்
சீவியமறியல் கேட்டு செப்பினார் அப்புகாத்து
இனி நடக்கும் செய்தி இயம்புகிறேன் அம்மானை

## விருத்தம்

இரண்டு நாள் விளக்கம் வைத்து தானும்
எதுகுமே செய்ய ஏலா என்றுமே தான்
கொண்டனே திரும்பவும் குமாரனுக்கு
எழுதியே முடித்து எழுந்தாரே ராசாக்கள்

## நடை

மரண தண்டனை வகுத்தார்கள் அம்மானை
கொண்டு போறார்கள் கண்டிக்கு மயிந்தனை
போகம்பறைக்கு புண்ணியர் கொண்டுமே
றூமில்விட்டு சுறுக்காய் பூட்டிவிட்டார்

இருந்து வழர்கிறார் ஏங்கி மணியனுமே
பயங்கள் கொடுக்குது பாலனுக்கு அம்மானை
மனமும் சலித்து வாடுகிறான் அங்கே
சாப்பிட விருப்பம் இல்லை தம்பி மணியனுக்கு
நித்திரை இல்லை நின்று தவிக்கிறான்
பயந்து ஏங்கி பாலன் இருக்கயிலே
தாய் தகப்பன் இனம் தானே திரண்டுமே
ஊர்ஊராய் போய் ஒண்டித்தார் பணம்
பிறிவுகவுஞ்சல் பிள்ளைகள் எடுத்தார்
அந்த கோட்டுக்கும் அழகாய் பணம் கட்டி
மகனை கேட்டு மண்டாடுகிறார் கடவுளை தான்
ஏழுராசா எடுத்து படித்தார்கள் வழக்கை
மணியன் வழக்கை மன்னர்கள் படித்தார்
எதுகும் வழியில்லை இவரை தப்ப வைக்க
ராசா ஏழுபேரும் தப்பாமல் எழுதிவிட்டார்
தூக்கு தண்டனை சுறுக்காய் எழுதினார்கள்
எழுதி முடிவில் என்ன செய்யலுற்றார்
பார்வைக்கு போகுது பாலன் வழக்குமே
நீதி மந்திரியிடம் நிமிடம் போகுது அம்மானை
படிக்கிறார் மந்திரி பாலன் வழக்கையுமே
இறைவன் இடம் கேட்டு இருந்து படிக்கிறார்
தாய் தகப்பன் ஓடி தானே எழுதுகிறார்
பிட்டிசம்கள் எழுதி அனுப்புகிறார்
மந்திரிகையிலே வந்ததுவாம் பிட்டிசம்
அவராலும் ஏலாமல் அங்கே இருக்குதாம்
ஊர்சனம் சேர்ந்தும் அனுப்புகிறார்
மந்திரிக்கு பிட்டிசம்கள் வகையாய் எழுதினார்கள்
எதுகும்ஏலா எடுத்து வைத்தார் வழக்கை
இப்படி இவரும் இருக்கிற வேளையிலே காண்
போட்ட பிட்டிசம்கள் பதிலும் இல்லையாம்
மணியன் செய்தி மக்களே கேளுங்கள்
வரிசம் மூன்று அங்கே கழியுது காண்
கடவுள் எழுத்தும் முடியுது அம்மானை
மந்திரி ஓடர் வருகுது போகம்பறைக்கு
கப்பிறிந்தார் எஸ்பி ஒடுசுறுக்காக

தம்பிமணியனை கொங்கோம் பண்ணி
தூக்கும்படி ஓடர் விட்டார் காண்
ஓடரும் வந்தது ஒரு நொடி நேரத்திலே
நாளும் பதினாலுநாள் சென்ற உடனே
தூக்கம்படி சுறுக்காய் விட்டார் காண்
வந்தது ஓடர் மக்களே கேளுங்கள்
தொங்கல் றூமில் சுறுக்காய் எடுத்தார்
சாப்பாடு அங்கே தேவமட்டும் காண்
பால் ஓடுபழம் பலகார வகைகளும்
மதுபானம் வகையாக தானும் அம்மானை
முட்டை இறச்சி முற்றும் கொடுக்கிறார்
சிக்கிறேட் வகை சீராக தானும் அங்கே
பேப்பர் பார்க்க பிள்ளைகள் கையிலே
புத்தி கூற ஐயா ஒரு தாரம்காண் அம்மானை
ஐயா கதைப்பது ஆருக்கோ என்பது போலே
மணியன் முளைமாளுது பாரும் காண்
எஸ்பீ சுப்பிறிந்தார் எந்தநேரமும் பார்
புத்திகள் கூறுகிறார் புண்ணியர்கள் அம்மானை
டீஓமோ அங்கே சீராய் வருகிறார் காண்
மருந்து சோதனை வகையாய் நடக்குது
இயமன் உடைய இடம்காண் அம்மானை
நாளும் ஓடி வருகுதுபாரும் அங்கே தான்
பதிமூன்று நாள் பாலனுக்குகளியவே
அன்றுபின்னேரம் அங்கே நடக்கும் வேலை
ஐயாமார் ஓடி அதிகம் வாறார்கள் அம்மானை
முடியும் வெட்டி சேவு எடுக்கிறதும்
ஆளை நிறுக்க திராசிகள்ளும் அங்கே
எல்லாம் செய்து முடிக்கிறார் அன்று
பதினாலாம் நாள் பாலனை தூக்க
சிறையின் முன்னாலே கறுத்த கொடிகளும்
சாப்பாடு வெல்லும் இல்லை கான்
காலை ஆறுமணிக்கு கண்ணைக் கழுவச் சொல்லி
பசுப்பால் ஒரு போர்த்தல் பாலன் மணியனுக்கு
கடைசிப்பால் அது கதறுகிறான் மணியனுமே

வாறான் அழுகோசி வகையாகதானும்
வந்து அழுகேசி மணியனையும் அங்கே
கட்டிப்பிடித்து காலுக்கு சங்கிலி காண்
வெள்ளைக் கோட்டு விதமாகத்தான் போட்டு
பூட்டுக்கள் போட்டு புகழாய் இறுக்கயே
கண்ணுக்கு மூடிக்காட்டுகிறார் காண்
அழுகேசி ஆளையும் அன்பாகக் கூட்டி
பாடும் மண்டபம் பாலனைக் கொண்டு விட்டு
சிவன் ஓடு பாட சீராய் வைத்தார் காண்
பாடி முடித்த உடன் பாலனைத்தானுமே
மேடையிலே ஏத்தி விதமாக நிற்பாட்டி
ஐயாமார் முன்னால் அங்கே இருந்தார்கள்
டீஓமோ எஸ்பியும் சுப்பிறிண்டர் யெயிலர்
இஞ்சாச்சி ஒருத்தர் இருந்து பார்க்கவே தான்
கால் வைக்க சீற்ரு தம்பி மணியனுக்கு
கீழுக்கு சுருங்க கிடங்குதான் அங்கே
ஐந்து நிமிடம் அங்கே வருமளவு
நேரம் எட்டு ஐந்து வந்ததுவாம் அம்மானை
கப்பியில் கயிறு கழுத்தில் அழுகேசும்
மணியன் கழுத்தில் வகையாகத்தான் இறக்கி
சூச்சியைத்தட்டி சுறுக்காய் விட்டாராம்
மணியன் சீவன் மக்களே போகுது பார் அம்மானை
போனதின் பின்னால் புகழாய் அவரைத் தான்
கட்டையாய் அழுகேசி கொண்டு போறார்
வெட்டிப்பழக விதமான வைத்தியர்கள்
றெயினங்கி பழக சீராய் வாரார்கள்
பண்டி வெட்டுவது போல் பாலனை அம்மானை
பார்த்தீரோ மேடரை பாலர்கள் நீங்கள்
எல்லோரும் கண்டு இன்பமாய் வாழவே
கொக்கட்டி மரத்தால் கொண்டு எழுத வைத்தார்
தம்பா நடந்தால் தம்பிகள் மரணந்தான்
ஏலாமல் வந்தால் என்னதான் செய்தாலும்
கடவுள் உமக்கு கண் திறப்பார் அம்மானை
செய்தாலும் வினை சேரவிடார் காண்
நம்பி நடக்க வேணும் நாட்டில் கடவுள் ஓடு

எல்லாம் இறைவன் கையில் இருக்குது அம்மானை
வணக்கமே சொல்லி மக்களே உங்கள் இடம்
குற்றமிருந்தாலும் குறைகொள்ளாதீர்
உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும்
அம்மானை கேட்ட அறிவாளர் எல்லாமே
கோபம் கொள்ளாதீர் குழந்தை என்மேல்
விநாயகர் விஷ்ணு முருகன் விதமாய்
அப்பன் சிவன் அம்மை அருளிய
எல்லாம் முற்றிற்று என் கதை அம்மானை

அம்மானை முற்றிற்று

## விநாயகர் வாழி

முந்திப் பிறந்த முக்கண்ணூர் வாழி
ஆனைகாத்தோன் ஐங்கரனும் வாழி
மறியல் வீட்டு அம்மானை மைந்தன்பாட
மாயபொருளாய் மாமாங்கம் வந்த
அமிர்தகழி வந்த அப்பன் தான் வாழி
கந்தர்கு முன் பிறந்த கணபதி ஆனவரே
வணங்கத் தெரியாத மடையான் எனக்கு
அருள் தந்த அப்பன் தான் வாழி

## மகாவிஷ்ணு வாழி

அரி ஓம் பச்சைமால் அப்பன் தான் வாழி
ஆரும் காணாபொருள் விசுபருபன் வாழி
பிரகலாதனை பேச வைத்த எங்கள்
பிதாவே உன்பாதம் பிடித்தேன் வாழி
கேதாரபிள்ளை எனக்கு கேட்டவரம்
திருபாற் கடல் வாளும் திருமால் வாழி
அம்மானை எழுத வந்த அறிவாள வாழி

## முருகையன் வாழி

கலியுகந்தன் கதிரமலையான் வாழி
கண்காணா காச்சி கலியுகத்தில் காட்ட வந்த
ஆறுமுகமுடைய ஆண்டவரே வாழி
திருவிளையாடல் காட்டும் திருமுருகன்

தேவர்கள் இடுக்கண தீத்தவரே வாழி
பிரணவ உள்பொருள் பிதாவே உன்பாதம் வாழி
துட்டரை தொலைக்க தோன்றி வந்த
என்று என்றும் உன் பாதம் வாழ வாழி

## சிவன் வாழி

பாலனை படைத்த பரமசிவமே வாழி
உலகை படைத்து ஒரு உருவம் இல்லாமல்
பல உருவம் ஆகி பார்போர் தாங்கு
மட்டக்களப்பு மண்முனை பற்றிலே தான்
கொக்கட்டிச்சோலை கொக்கட்டி மரத்தில்
காட்சி அளிக்க வந்த கடவுளே வாழி
நம்பினோர் அருள் நாட்டில் தரும்
தாந்தோன்றி அப்பா உன் பாதம் வாழ வாழி

## சரசுபதி வாழி

ஞான கல்வியை நாட்டி வைத்த எங்கள்
ஆதிசக்தி அம்மை தான் பாதம் வாழி
எங்கும் நிறை பொருளே என் தாய் உலகே
இச் சிறுபாலனை ஈன்றவளே வாழி.

மறியல் வீட்டு அம்மானை மைந்தர்கு பாட
எழுத வைத்த எங்கள் தாயே வாழி
தேவர்களும் பணிகின்ற தேவியே உன்
திரு பாதம் பணிந்தேன் நான் வாழ வாழி

## பொது வாழி

இலங்கை முற்றும் எப்பொழுதும் வாழி
ஆளும் அரசாங்கதார் அனைபேரும் வாழி
பிள்ளை எழுதிய பிழைகளை திருத்தியே
வேண்டி படித்தோர் விண் உலகில் வாழி
சிறைச்சாலை எல்லாம் சீராகதான் வாழி
இலங்கை மக்கள் எல்லோரும் வாழி
அரசாங்கம் சிறை அழியாமல் வாழ வாழி

**வாழி முற்றிற்றது.**

# நன்றி நவிலல்

இப்புத்தகத்தை அச்சிடுவதற்கு உதவி
புரிந்த பிரதேச சபைக்கும்,
கொக்கட்டிச்சோலை மக்களுக்கும்,
நிதியுதவி தந்து உதவியவர்களுக்கும்,
ஆசியுரை வழங்கியவர்களுக்கும்,
இம்மலரை அச்சிட்டு வெளியிட்ட
எவகிறீன் அச்சகத்தாருக்கும் மனமார்ந்த
நன்றிகள்.

நன்றி.



எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி, மட்டக்களப்பு. ✆ 065-2222607